# மின் தடைகள்: மாற்று எரிபொருள் மற்றும் மின்சார உற்பத்தியைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துதல்

சமூகத் தகவல்

மின் தடைகள் ஏற்படும் போது (வழக்கமாக கடுமையான வானிலை நிகழ்வின் விளைவாக), மக்கள் சிலவேளைகளில் சமையல், ஒளியேற்றுதல், வெப்பமாக்குதல் அல்லது ஆற்றல் முதலியவற்றுக்காக மாற்று எரிபொருள் அல்லது மின்சார உற்பத்தி மூலங்களைப் பாவிக்கிறார்கள்.

எடுத்துச் செல்ல இலகுவான ஜெனரேற்றர்களால் சில வழக்கமான செயற்பாடுகளைத் தொடர்ந்து செய்ய அனுமதிக்க முடியும், என்றாலும் அவற்றைக் கவனமாகப் பாவிப்பது முக்கியமாகும்.

பெற்றோல் அல்லது டீசலில் இயக்கப்படும் ஜெனரேற்றர்கள் காபனோரொட்சைட் வாயுவை உற்பத்தி செய்யக் கூடியவை, எனவேதான் திறந்திருக்கும் யன்னல்கள் மற்றும் துவாரங்களிலிருந்து தூர வைத்தபடி **நன்கு காற்றோட்டமுள்ள வெளியிடப் பகுதியில் மட்டுமே இவற்றை இயக்க வேண்டும்**.

காபனோரொட்சைட் வாயுவைக் கண்ணால் பார்க்க முடியாது, அதன் மணத்தை உணர முடியும். இந்த வாயு வீட்டில், கராஜில் அல்லது மூடுவண்டியில் உருவாக்கப்பட்டால், திடீர் உடல் நலக்குறைவு, அறிவிழப்பு, மரணம் முதலியவற்றை உண்டாக்கலாம். உங்களுடைய செல்லப் பிராணிகளையும் அதேவேளை குடும்பத்தினரையும் பற்றிச் சிந்தியுங்கள்.

**வெளியிடத்திற்காக வடிவமைக்கப்பட்ட சாதனங்களை வீடு,** கீழ்த்தளம், கராஜ், மூடுவண்டி அல்லது கூடாரத்தில் அல்லது திறந்திருக்கும் யன்னலுக்கு அருகில் வெளியிடத்தில் கூட **உபயோகிக்க வேண்டாம்.** மின்சார ஜெனரேற்றர்கள், கிரில்கள், முகாம் அடுப்புகள் அல்லது மற்றைய பெற்றோல், LP வாயு, இயற்கை வாயு அல்லது கரியை எரிக்கின்ற சாதனங்கள் போன்ற கருவிகளை அவற்றின் உற்பத்தியாளர் குறிப்பிட்டவாறு மட்டுமே உபயோகிக்க வேண்டும்.

## மின்சார ஜெனரேற்றர்கள்

எடுத்துச் செல்ல இலகுவான ஜெனரேற்றர்கள் மிகவும் பயனுள்ளவை என்றாலும் கூட, அவற்றைப் பாதுகாப்பாகப் பாவிக்காவிட்டால்:

- எஞ்சினிலிருந்து வெளியேறும் வாயுவால் காபனோரொட்சைட் நஞ்சாக்கம் ஏற்படலாம்.
- மின்னதிர்ச்சி அல்லது மின்சாரத்தால் மரணம் ஏற்படலாம்.
- தீ ஏற்படலாம்.

வீட்டிலுள்ளவர்கள் பாதுகாப்பான பாவனையை உறுதிப்படுத்துவதற்கு, ஜெனரேற்றருடன் வழங்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

## ஜெனரேற்றரை கொள்வனவு செய்தல்

நிரந்தரமாக பொருத்தப்பட்ட நிலையான ஜெனரேற்றர்களே வீட்டுக்கு காப்புப் பிரதி மின்சாரத்தை வழங்குவதற்கு மிகப் பொருத்தமானவை.

**அனுமதிப் பத்திரம் பெற்ற மின்சார வல்லுநர் மட்டுமே நிரந்தர ஜெனரேற்றரை இணைக்க வேண்டும்.**

## எடுத்துச் செல்ல இலகுவான ஜெனரேற்றரைப் பாதுகாப்பாக உபயோகித்தல்

- எடுத்துச் செல்ல இலகுவான ஜெனரேற்றரை உள்ளிடங்களில் உபயோகிக்கக் கூடாது உள்ளிடங்களில் கராஜ், கார்க் கொட்டகை, அடித்தளம், சிறிய இடம் அல்லது மற்றைய  மூடிய அல்லது பகுதியாக மூடிய பகுதியின், அங்கு காற்றோட்டம் இருந்தால் கூட, உட்புறம் உள்ளடங்கும்.
- ஜெனரேற்றரை யன்னல்களிலிருந்து தூரமாக வெளியிடங்களில் இயக்கவும்.
- பாவிக்கும் முன்னர் உற்பத்தியாளரின் அறிவுறுத்தல்களை வாசிக்கவும்.
- ஜெனரேற்றரில் அளவுக்கதிகமாக சுமை ஏற்ற வேண்டாம்.
- எரிபொருளை மீண்டும் நிரப்பும் போது அல்லது பாவனையில் இல்லாத போது, ஜெனரேற்றரை நிறுத்திவிடவும்.

கதவுகளையும் யன்னல்களையும் திறந்துவிடுவது வீட்டில் காபனோரொட்சைட் படிப்படியாகத் திரளுவதைத் தடுக்கும். உங்களுடைய வீட்டில் பட்டரியில் இயக்கப்படும் காபனோரொட்சைட் அலாரங்களைப் பொருத்துவது நல்லதொரு யோசனையாகும். பட்டரியை அடிக்கடி சோதித்துப் பார்த்து, தேவையான போது அதை மாற்றவும்.

## மின்சாரத்தால் ஏற்படும் மரணத்தைத் தடுப்பதற்கு

- ஜெனரேற்றரை உலர்வாக வைத்திருக்கவும், மழையில் பாவிக்க வேண்டாம்.
- ஜெனரேற்றரை ஈரத்தன்மையிலிருந்து பாதுகாக்க, கம்பங்களின் மீது விரிக்கப்பட்ட தார்ப்பாய் போன்ற திறந்த முகடு போன்ற அமைப்பின் கீழு உலர்வான மேற்பரப்பின் மீது பயன்படுத்தவும்.

VICTORIA State Government
Health and Human Services

- ஜெனரேற்றரைத் தொடும் முன்னர் உங்களுடைய கைகளை எப்போதுமே துடைத்து உலர்த்தவும்.

## ஜெனரேற்றருக்கு எரிபொருளை மீண்டும் நிரப்புதல்

- ஜெனரேற்றர் நிறுத்தப்பட்டிருப்பதை உறுதிசெய்து, எரிபொருளை மீண்டும் நிரப்பும் முன்னர் குளிர விடவும். சூடான எஞ்சின் பாகங்களின் மீது சிந்தப்படும் பெற்றோல் எரியலாம்.
- பெற்றோலை வீட்டுக்கு வெளியே பூட்டியுள்ள கொட்டாரத்தில் அல்லது மற்றைய பாதுகாக்கப்பட்ட பகுதியில் சேமித்து வைக்காவும்.
- எரிபொருளை எரிக்கின்ற சாதனங்களுக்கு (இயற்கை வாயு வோட்டர் ஹீற்றர் போன்ற அல்லது கராஜில் காருக்கு அருகில்) அருகில் எந்தவொரு எரிபொருளையும் சேமித்து வைக்க வேண்டாம்.

## ஜெனரேற்றருடன் இணைக்கப்பட்ட சாதனங்களை உபயோகித்தல்

தீயால் அல்லது கடுமையான காற்றால் கணிசமாகச் சேதமாக்கப்பட்டுள்ள சொத்திற்குத் திரும்பிவந்தால், சாதனங்கள் எதையும் இணைத்து, இயக்குவதற்கு முன்னர் வயரிங்கையும் மற்றைய மின்சாரப் பொருத்துதல்களையும் முதலில் சோதனை செய்வது முக்கியமாகும்.

மேலதிகமாக நீங்கள் செய்ய வேண்டியவை:

- சாதனங்களை கனரக, வெளியிடத்திற்கென தரமிட்டுள்ள நீட்டிப்பு வயரின் வழியாக நேரடியாக ஜெனரேற்றரில் செருக வேண்டும்.
- நல்ல நிலையிலுள்ள குறுகிய நீட்டிப்பு ஈயத் தகடுகளையும், மூன்று கவர்முட்களுள்ள பிளக்குகளையும் உபயோகிக்க வேண்டும்.
- ரீல்கள் அல்லது ட்ரம்களிலிருந்து நீட்டிப்பு ஈயத் தகடுகளை முழுதாக அவிழ்த்தெடுக்க வேண்டும்.

ஜெனரேற்றரை சுவரிலுள்ள அவுட்லெற்றில் செருகுவதன் மூலம் வீட்டுக்கு மின்சாரமளிக்க முயற்சிக்க வேண்டாம். இது மின்சாரக் கம்பிகள் வழியே 'பின்னோக்கிச் செல்லக்" கூடியது, மேலும் உங்களுக்கும் உங்களுடைய அக்கம்பக்கத்தினருக்கும் மிகவும் ஆபத்தானவை.

## காபனோரொட்சைட் நஞ்சாக்கத்தைத் தடுத்தல்

- வீட்டிற்கு வெப்பமேற்ற காஸ் ஸ்ரவ்வை அல்லது ஓவனைப் பாவிக்கவே கூடாது.
- வீடு, கூடாரம் அல்லது மூடுவண்டியின் உள்ளே கரி கிரில், ஹிபச்சி, லன்ரர்ன் அல்லது கைக்கடக்கமான முகாமில் பயன்படுத்தும் அடுப்பு முதலியவற்றைப் பாவிக்கவே கூடாது.
- கதவுகள் அல்லது யன்னல்கள் திறந்திருந்தால் கூட, உபகரணத்தை நிபுணத்துவ முறையில் பொருத்தி, வெளிச்செல்லும் வழியை அமைக்கும் வரை, ஜெனரேற்றர், பிரஷர் வோஷர் அல்லது ஏதேனும் எரிபொருளில் இயக்கப்படும் எஞ்சினை அடித்தளம், கராஜ் அல்லது மற்றைய மூடப்பட்ட அமைப்பில் இயக்கக் கூடாது.
- துவாரங்கள் மற்றும் புகைபோக்கிகளில் குப்பை சேராமல் வைத்திருங்கள், குறிப்பாக காற்று பலமாக வீசினால், பறந்துவரும் குப்பைகள் காற்றோட்டத் துவாரங்களை அடைத்துவிடலாம்.
- திறந்துள்ள யன்னல், கதவு அல்லது வெளிச்செல்லும் வழிக்கும் வெளிப்புறமாக மோட்டார் வாகனம், ஜெனரேற்றர், பிரஷர் வோஷர் அல்லது ஏதேனும் எரிபொருளில் இயக்கப்படும் எஞ்சினை ஒருபோதும் இயக்க வேண்டாம், அவ்வாறு இயக்கினால் வெளியேற்றப்படும் வாயுவானது மூடப்பட்ட பகுதிக்குள் நுழையலாம்.
- கராஜ் போன்ற முடப்பட்டுள்ள அல்லது பகுதியாக மூடப்பட்டுள்ள இடத்தில் வாகனத்தைத் தரித்து வைத்துள்ள போது, மோட்டாரை இயங்கும் நிலையில் விட்டுச்செல்ல வேண்டாம்.
- உங்களுக்கு உடல் நலமில்லாமை, தலைச்சுற்று அல்லது பலமின்மை முதலிய உணர்வுகள் ஏற்பட ஆரம்பித்தால், உடனடியாக சுத்தமான காற்றிருக்கும் பகுதியை அடைக மற்றும் உடனடி மருத்துவ ஆலோசனையைப் பெறுக.

## மேலும் தகவலுக்கு

- வாயு அல்லது மின்சாரத்தைப் பாதுகாப்பாக உபயோகித்தல் பற்றிய தகவலுக்கு, 9203 9700 என்ற இலக்கத்தில் Energy Safe Victoria-ஐத் தொடர்புகொள்ளுங்கள் அல்லது பின்வரும் இணையத்தளத்தைப் பாருங்கள்: www.esv.vic.gov.au
- வாயுக் கசிவைப் பற்றி முறைப்பாடு செய்ய, 132 771 என்ற இலக்கத்தை அழையுங்கள்.
- காபனோரொட்சைட்டில் இருப்பதால் ஏற்படும் சுகாதார விளைவுகள் பற்றிய தகவலுக்கு, உங்களுடைய உள்ளூர் வைத்தியரிடம் கேளுங்கள்.
- காபனோரொட்சைட் பற்றிய பொதுவான சுகாதாரத் தகவலுக்கு, 1300 761 874 என்ற இலக்கத்தில் Department of Health and Human Services-இலுள்ள சுற்றாடல் சுகாதாரப் பிரிவைத் தொடர்புகொள்ளுங்கள்.

அங்கீகரித்து, வெளியிட்டவர்: விக்ரோரிய அரசாங்கம், 1 Treasury Place, Melbourne.
© விக்ரோரிய மாநிலம், Department of Health and Human Services, ∴பெப்ரவரி 2016.